**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.255/2020**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 1 |
| Name | : Thiru.Velu |
| Father's Name | : காசி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.02.2021.

**முதல் விசாரணை -**

நான் வாலாஜாபாத்தில் வசித்து வருகிறேன். நான் கார் மெக்கானிக்காக பணி புரிந்து வருகிறேன். கடந்த 23.03.2019 அன்று இரவு 07.30 மணியிலிருந்து 08.30 மணிக்குள்ளாக நான் வண்டலூர் பிரிட்ஜின் கீழ் உள்ள கடைக்கு சென்றிருந்தேன். நான் அந்த பானிபூரி கடையிலிருந்து சாப்பிட்டு விட்டு வீட்டிற்கு செல்லும்பொழுது 2 நபர்கள் முகத்தில் கர்சீப்பை கட்டிக் கொண்டும், அதில் ஒருவர் லுங்கியிலும் மற்றொருவர் பேன்ட்டும் அணிந்திருந்தார். அவர்கள் இருவரும் என்னிடம் வந்து பணம் கேட்டனர். நான் அதற்கு இல்லை என்று கூறினேன். அதற்கு அவர்கள் இருவரும் கன்னத்தில் அடித்தார்கள். அப்பொழுது அவர்கள் காசு இல்லை என்றால் என்ன செயினைக் கொடு என்றும் கேட்ட பின்னர் கத்தியால் கையைக் கீறினர். அந்த செயின் 1 சவரன் மற்றும் 1|4 சவரன் டாலர் கொண்டதாகும். அதற்குப்பின்னர் நான் வீட்டிற்குச் சென்று எனது அப்பாவின் சொன்னேன். அவர் புகார் கொடுக்கலாம் என்றார். அன்றைய தினம் இரவே காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். இன்று நீதிமன்றத்தில் என் முன்பாகக் காட்டப்படும் புகாரானது அசாஆ 1 ஆகும். என்னிடம் காட்டப்படும் போட்டோவில் உள்ள அறுக்கப்பட்ட நிலையில் உள்ள செயின் தான் என்னிடம் இருந்து களவாடப்பட்ட செயின் ஆகும். அந்த செயினானது அரசு தரப்பில் சா.பொ.1 வரிசை 2 எண்ணிக்கைகள் ஆகும். அந்த செயினை நான் இந்த நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுச்சென்று விட்டேன். அந்த செயினை இந்த நீதிமன்றத்தில் நான் இப்பொழுது காண்பித்தேன். போலிசார் சம்பவம் குறித்து என்னிடம் விசாரணை செய்தார்கள். என்னிடம் செயினைத் திருடியவர்களில் ஒருவர் ஒல்லியாகவும் உயரமாகவும் இருப்பார், ஆனால் ஆஜரில் உள்ளவர்கள் அவர்கள் இல்லை. எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள்.

**குறுக்கு விசாரணை -**

நான் கொடுத்த புகார் சம்பந்தமாக என்னைக் காவல் நிலையத்தில் வைத்து என்னை போலிசார் விசாரணை செய்தார்கள் என்றால் ஆமாம். என்னிடம் இருந்து என் செயினைப் பறித்த நபர்களைப் பற்றிய அடையாளங்களை நான் அன்றே காவல் நிலையத்தில் சொன்னேனா என்றால் ஆமாம். சொன்ன தேதி, நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் செயின் காணாமல் போனதால் அதை திருப்பி வாங்குவதற்காக பொய்யான புகாரை காவல் நிலையத்தில் தாக்கல் செய்திருப்பதாகச் சொன்னால் அது சரியல்ல.

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.255/2020**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 2 |
| Name | : Thiru.Loganathan |
| Father's Name | : ராமச்சந்திரன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.02.2021..

**முதல் விசாரணை -**

நான் வண்டலூரில் வெல்டிங் வேலை செய்து வருகிறேன். நான் ஸ்டேஷனுக்காக ஒரு விஷயமாக சென்றிருந்தேன். அங்கு என்னிடம் முகவரி கேட்டார்கள், இந்த வழக்கு குறித்து எனக்கு வேறு எதுவும் தெரியாது.

**இந்நிலையில் இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை -

நான் எனது போலிஸ் விசாரணையில் வேலு என்பவர் எனது தெருவைச் சேர்ந்தவர் என்றும், நெடுஞ்செழியன் மற்றும் லோகேஷ் என்பவர்கள் எனது தெருவிற்கு பக்கத்து தெருவில் வசிப்பவர்கள் என்றும் கூறினேன். வேலு என்பவர் வண்டலூர் பிரிட்ஜ் ற்குக் கீழ் இருக்கும் பானிபூரி கடைக்கு சென்றுவிட்டு திரும்பும்பொழுது நெடுஞ்செழியன் மற்றும் லோகேஷ் என்பவர்கள் கத்தியைக் காட்டி வழிமறித்து வேலு கழுத்தில் இருந்து டாலருடன் இருந்த செயினை பறித்தது குறித்து உங்களுக்குத் தெரியுமா என்றால் தெரியாது. மறுநாள் இந்த சம்பவம் குறித்து வேலுவிடம் யாரோ தகராறு செய்ததாக கேள்விபட்டேன். நான் வெல்டிங் வேலைக்காக காலை 08.00 மணிக்கு சென்று விட்டு மாலை 06.00 திரும்புவேன், ஓ.டீ. இருந்தால் இரவு 08.00 டூ 08.30 மணிக்கும் திரும்புவது வழக்கம். அதுபோல் வீடு திரும்பும்போது 22.03.2019 அன்று எங்கள் ஊரைச் சேர்ந்த நெடுஞ்செழியன் மற்றும் லோகேஷ் என்பவரும் எங்கள் ஊரைச் சேர்ந்த வேலு என்பவரின் கழுத்தில் இருந்த செயினைப் பறித்து விட்டு அவருடைய கையில் வெட்டி விட்டு தப்பித்து ஓடிவிட்டனர் என்பது குறித்து எனக்குத் தெரியும் என்றும் இது சம்பந்தமாக காவல்

நிலையத்தில் என்னை விசாரணை செய்தபொழுது சொல்லி விட்டு தற்பொழுது ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**குறுக்கு விசாரணை -** இல்லை.

Sd. xxxxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxxxx
Judicial Magistrate No.II
Chengalpattu.